கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.

முன்னிலை - திரு. S. ராஜசிம்மவர்மன், பி.ஏ., பி.எல் ( Hons),
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ம் நாள் திங்கட்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 தமிழ் விசுவாவசு ஆண்டு பங்குனி மாதம் 02 ம் நாள்

( முதல் நிலை பதிவேடு வழக்கு எண். 89/2025 )

( நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 விழுப்புரம் )

( தாலுக்கா காவல் நிலைய குற்ற எண். 675 /2022)

**அமர்வு வழக்கு எண் . 259 / 2025**

**(CNR NO. TNVP 01- 005550 - 2025 )**

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசுக்காக | - | காவல் ஆய்வாளர்,<br>தாலுக்கா காவல் நிலைய குற்ற எண். 675 /2022. |
| 2. | குற்றம்சாட்டவர் பெயர், வயது, வேலை, தந்தை பெயர் மற்றும் முகவரி | | தீனதயாளன் ( வயது 42)<br>த/பெ. கிருஷ்ணமூர்த்தி,<br>தெற்கு தெரு, மேலமங்கலம் கிராமம்,<br>திருவெண்ணெய்நல்லூர் தாலுக்கா<br>விழுப்புரம் மாவட்டம். |
| 3. | சம்பவ நாள் | | 16.10.2022 |
| 4. | புகார் நாள் | | 16.10.2022 |
| 5. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | எதிரி கைது செய்யப்படவில்லை. |
| 6. | எதிரி பிணையில் சென்ற நாள் | : | ----- |

| | | | |
|---|---|---|---|
| 7. | எதிரி மீதான குற்றச்சாட்டு | : | எதிரி மீது இதச பிரிவு . 328 உ/இ- 24(1) COTPA Act 2003 . |
| 8. | எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | | எதிரி மீது இதச பிரிவு. 328 உ/இ- 24(1) COTPA Act 2003 . |
| 9. | எதிரியின் பதில் | | குற்றவாளி அல்ல |
| 10 | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | - | 19.11.2025 |
| 11. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | | 13.03.2026 |
| 12. | நீதிமன்றத்தின் தீர்மானம் | | எதிரி இதச பிரிவு .328 உ/இ- 24(1) COTPA 2003 .<br>கீழ் குற்றவாளி அல்ல . |
| 13. | நீதிமன்றத்தின் தீர்ப்பும் தண்டனையும், | - | முடிவாக, எதிரி மீது இதச. 328 உ/இ- 24(1) COTPA Act 2003 ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு . 235 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன். இவ்வழக்கில் எதிரிக்கு ஏற்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | | | பிணைமுறிகள் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் இரத்தாகும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 14. | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்ட நாள் | | எதிரி விடுதலை செய்யப்பட்டதால், தீர்ப்பின் நகல் வழங்கப்படவில்லை. |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | | இல்லை |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பாக 23.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திரு.இரா.சுப்பராயலு அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. D. S. செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்,

## தீர்ப்புரை

கடந்த 16.10.2022 ம் தேதி காலை 11.30 மணிளவில் தாலுக்கா காவல் உதவி ஆய்வாளர் திருமதி. சத்தியா என்பவருடன் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் விழுப்புரம் தாலுக்கா காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஜானகிபுரம் ஜங்கசனில் வாகன தணிக்கை

செய்துக்கொண்டிருந்தபோது எதிரி தீனதயாளன் என்பவர் TN 32 AS 9424 என்ற பதிவெண் கொண்ட Honda Activa இருசக்கர வாகனத்தில் மனித உயிருக்கு கேடு விளைவிக்கக்கூடிய அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களான Hans-600 பாக்கெட்டுகள், Cool lip - 80 பாக்கெட்டுகள் VI -20 பாக்கெட்டுகள் ஆகியவற்றை விற்பனைக்காக எடுத்து வந்து குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரியின் செய்கையானது இதச பிரிவு. 328 உ/இ- 24(1) COTPA 2003, ன் விழுப்புரம் தாலுக்கா காவல் ஆய்வாளர் அவர்களால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலித்த வகையில், விழுப்புரம், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1 அவர்கள் இந்த வழக்கை முதல் நிலை பதிவேடு வழக்கு எண். 89 /2025 ஆக கோப்பிற்கு எடுத்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச. பிரிவு. 207 - ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கி, பிரிவு. 328 உ/இ. 24(1) Cotpa Act - ன் படியான குற்றம் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கக்கூடியது என்பதால், கு.வி.மு.ச. பிரிவு. 209 (அ) ன் படி இவ்வழக்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டுள்ளது. விழுப்புரம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அந்நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண். 259 /2025 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்ற **D.No. 7398/2025** நாள். **13.10.2025** தேதிய உத்தரவுபடி வழக்கு கோப்புகள் அனுப்பப்பட்டு, 17.10.2025 அன்று இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளது.

3) இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரி ஆஜரானவுடன், கற்றறிந்த கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் இந்த அமர்வு வழக்கை கு.வி.மு.ச. பிரிவு . 226 ன் கீழ் திறப்பு செய்தார். இவ்வழக்கில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைய அரசு தரப்பில் முக நோக்கு வழக்கு உள்ளது என முடிவு செய்து, எதிரியின் மீது இதச பிரிவுகள். 328 உ/இ- 24(1) COTPA Act 2003 ன் படி குற்றச்சாட்டுக்கள் வனைந்து அவற்றின் சாராம்சத்தை எதிரிக்கு தமிழில் விளக்கிக் கூறி வினவியபோது, எதிரி அவற்றை மறுத்து அவர் குற்றவாளி அல்ல என்று தெரிவித்ததால் இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கவேண்டி அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா. 3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்று பொருளான சா.பொ.1 முதல் சா.பொ. 4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது .

5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து 313(1) (ஆ) பிரிவின் கீழ் எதிரியிடம் விரிவாக விளக்கி வினவிய போது, எதிரி சாட்சியத்தை பொய் என மறுத்தார் . எதிரி தரப்பில் சாட்சிகள் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இருதரப்பும் கேட்கப்பட்டது.

**7) அரசு தரப்பு சாட்சிய, சான்றாவணங்களில் இருந்து தெரியவரும் அரசு தரப்பின் விவரங்கள் பின்வருமாறு :-**

(i) அ. சா. 1 திரு. தேவசேனா தனது சாட்சியத்தில் " தான் தற்போது கண்டமங்கலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தான் கடந்த 16/10/2022-ஆம் தேதி தாலுக்கா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தேன் என்றும், உதவி ஆய்வாளர் சத்யா, காவலர் இளவேந்தன், ஆகியோர் அன்று காலை 11 - 30 மணிக்கு எங்களது காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட ஜானகிபுரம் ஜங்ஷன் அருகில் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, TN.32AS9424 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இரு சக்கர வாகனத்தில் ஒரு வெள்ளை பையுடன் வந்தவரை மடக்கி விசாரிக்க எத்தனித்தபோது, அவர் இருசக்கர வாகனத்தை கீழே போட்டுவிட்டு தப்பித்து ஓடிவிட்டார் என்றும், அந்த வெள்ளைப் பையை சோதனை செய்ய அதில் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் சுமார் 14.5 கிலோ கிராம் எடையுள்ள HANS பாக்கெட் - 600 பாக்கெட் (40 x 15), Cool lip - 80 பாக்கெட் (8 x 10), V1 Tobacco - 20 பாக்கெட் ஆகியவற்றின் மதிப்பு ரூ.14,500/- இருக்கும் என்றும், மேலும் அவரைப் பற்றி விசாரித்த போது, அவரது பெயர் தீனதயாளன் தந்தை பெயர் கிருஷ்ணமூர்த்தி மேற்கு தெரு, மேலமங்கலம், திருவெண்ணைநல்லூர் தாலுக்கா என்று தெரியவந்தது என்றும், அவரைப் பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும், அவர் தற்போது நீதிமன்றத்தில் உள்ள எதிரி தான் என்றும், மேலும் மேற்படி பொருட்களையும், அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும், அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் தங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர்

அவர்கள் 11.45 மணி அளவில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றிக் கொண்டார்கள் என்றும், அதில் தானும், முதல் நிலை காவலர் 2332 இளவேந்தனும் கையொப்பம் செய்தோம் என்றும், கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் 13.00 மணிக்கு காவல் நிலையம் ஆஜரானோம் என்றும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1ம் கையெழுத்து தன்னுடையதாகும் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆகும். மேலும் HANS - 600 பாக்கெட், Cool lip - 80 பாக்கெட், V1 Tobacco - 20 பாக்கெட் ஆகியவைகளையும், மேலும் அந்த இருசக்கர வாகனம் ஹோண்டா ஆக்டிவா பதிவு எண் TN-32AS-9424 ஆகியவைகளை பார்த்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும், அதில் 1 முதல் 3 வரையிலானவைகள் சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையிலானவை என்றும், மேலும் ஆக்டிவா வாகனத்திற்கான 3 புகைப்படங்கள் சா.பொ.4 என்றும், காவல் நிலையம் சென்று உதவி ஆய்வாளர் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, எங்களை விசாரணை செய்தார்கள் என்றும், நாங்கள் நடந்தவைகளை சொல்லிக் கொண்டோம் என்றும் " சாட்சியம் அளித்துள்ளார்,

(ii) அ.சா,2 திரு. இளவேந்தன் தனது சாட்சியத்தில், " தான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தான் கடந்த 16/10/2022-ஆம் தேதி தாலுக்கா காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்தேன் என்றும், உதவி ஆய்வாளர் சத்யா, தலைமைகாவலர் தேவசேனா, ஆகியோர் அன்று காலை 11 - 30 மணிக்கு தங்களது காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட ஜானகிபுரம் ஜங்ஷன் அருகில் வாகன

சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, TN.32 AS 9424 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இரு சக்கர வாகனத்தில் ஒரு வெள்ளை பையுடன் வந்தவரை மடக்கி விசாரிக்க எத்தனித்தபோது, அவர் இருசக்கர வாகனத்தை கீழே போட்டுவிட்டு தப்பித்து ஓடிவிட்டார் என்றும், அந்த வெள்ளைப் பையை சோதனை செய்ய அதில் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் சுமார் 14.5 கிலோ கிராம் எடையுள்ள HANS பாக்கெட் - 600 பாக்கெட் (40 x 15), Cool lip - 80 பாக்கெட் (8 x 10), V1 Tobacco - 20 பாக்கெட் ஆகியவற்றின் மதிப்பு ரூ.14,500/- இருக்கும் என்றும், மேலும் அவரைப் பற்றி விசாரித்த போது, அவரது பெயர் தீனதயாளன் தந்தை பெயர் கிருஷ்ணமூர்த்தி, மேற்கு தெரு, மேலமங்கலம், திருவெண்ணைநல்லூர் தாலுக்கா என்று தெரியவந்தது. அவரைப் பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும், . அவர் தற்போது நீதிமன்றத்தில் உள்ள எதிரி தான் என்றும் மேலும் மேற்படி பொருட்களையும், அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும், அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் தங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் அவர்கள் 11.45 மணி அளவில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றிக் கொண்டார்கள் என்றும், அதில் தானும், காவலர் முதல் நிலை காவலர் தேவசேனாவும் கையொப்பம் செய்தோம் என்றும், கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் 13.00 மணிக்கு காவல் நிலையம் ஆஜரானோம் என்றும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 ம் கையெழுத்து தன்னுடையதாகும் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 என்றும், மேலும் HANS - 600 பாக்கெட், Cool lip - 80 பாக்கெட், V1 Tobacco - 20 பாக்கெட் ஆகியவைகளையும், மேலும் அந்த இருசக்கர வாகனம் ஹோண்டா ஆக்டிவா பதிவு எண் TN-32AS-9424 ஆகியவைகளை பார்த்தால்

தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும், அதில் 1 முதல் 3 வரையிலானவைகள் சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையிலானவைகளாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்றும், மேலும் ஆக்டிவா வாகனத்திற்கான 3 புகைப்படங்கள் சா.பொ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், காவல் நிலையம் சென்று உதவி ஆய்வாளர் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தங்களை விசாரணை செய்தார்கள் என்றும், தாங்கள் நடந்தவைகளை சொல்லிக் கொண்டோம் என்றும் " சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 திரு. சத்யா தனது சாட்சியத்தில், " தான் தற்போது Cyber Crime - ல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றும், தான் கடந்த 16.10.2022- ல் விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 11.30 - மணிக்கு தன்னுடன் பணிபுரிந்த முதல் நிலை காவலர் தேவசேனா 763, காவலர் இளவேந்தன் 2332 ஆகியோர் சகிதம் விழுப்புரம் தாலுக்கா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலை ஜானகிபுரம் ஜங்ஷனில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, அந்த வழியாக திருச்சி நோக்கி வந்த TN 32 AS 9424 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா வாகனத்தில் வெள்ளை நிற சாக்கு பையுடன் வந்தவரை சந்தேகத்தின் பெயரில் நிறுத்திய போது மேற்படி நபர் போலீசாராகிய தங்களை கண்டதும் வாகனத்தை நிறுத்திவிட்டு தப்பி ஓடி தலைமறைவாகிவிட்டார் என்றும், பின்பு வாகனத்தை சோதனை செய்து பார்த்தபோது, அந்த சாக்கு பையில் 1) ஹான்ஸ்-40 பாக்கெட்டுகள் 15 வீதம் மொத்தம் 600 பாக்கெட்டுகள், 2) Cool lip - 8 பாக்கெட்டுகள் 10 வீதம் மொத்தம் 80 பாக்கெட்டுகள்,

3) V1 Tobacco - 20 பாக்கெட்டுகள் மொத்தம் சுமார் 14 ½ கிலோ இருந்தது. இதன் மொத்த மதிப்பு சுமார் ரூ.14,500 என்றும், தப்பி ஓடிய தலை மறைவு எதிரியை பற்றி விசாரிக்க ரகசிய தகவலின் பெயரில் அவரது பெயர் முகவரி தீனதயாளன் த/பெ. கிருஷ்ணமூர்த்தி, தெற்கு தெரு, வேலமங்கலம் என தெரிய வந்தது. எனவே மனித உயிருக்கு கேடு விளைவிக்கக் கூடிய அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் மற்றும் மேற்படி இருசக்கர வாகனம் கைப்பற்ற அன்னிய சாட்சிகள் யாரும் முன் வராததால், என்னுடன் வந்த மேற்படி போலீஸ் சாட்சிகளின் முன்னிலையில் 11:45 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த 1) ஹான்ஸ்-40 பாக்கெட்டுகள் 15 வீதம் மொத்தம் 600 பாக்கெட்டுகள், 2) Cool lip - 8 பாக்கெட்டுகள் 10 வீதம் மொத்தம் 80 பாக்கெட்டுகள், 3) V1 Tobacco - 20 பாக்கெட்டுகள் ஆகியவை ஏற்கனவே சா.பொ.1 முதல் 3 வரையில் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரு சக்கர வாகனத்தின் புகைப்படம் எண்ணிக்கை - 3 சா.பொ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கைப்பற்றிய பொருட்கள் மற்றும் பார்ட்டி சகிதம் 13.00 மணிக்கு நிலையம் ஆஜராகி எதிரியின் மீது விழுப்புரம் தாலுக்கா நிலைய குற்ற எண் 675/2022 இ.த.ச பிரிவுகள் 328 உ/இ 24 (1) COTPA ACT -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகசரை படிவம்-95 மற்றும் பொருட்களுடன் இணைத்து கனம் விழுப்புரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் - 1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், அந்த படிவம்-95 அ.சா.ஆ 3 என்றும், பின்பு மேற்படி

சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து, வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளேன் என்றும், இந்த வழக்கின் தலை மறைவு எதிரிகளை தேடியதில் எதிரி மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்றது தெரியவந்தது என்றும், எனவே வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 328 உ/இ 24 (1) COTPA ACT -ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும்," சாட்சியம் அளித்துள்ளார் .

9) இருதரப்பு வாய்மொழி சாட்சியம் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரைகளையும் ஆய்வு செய்ததில், இந்த நீதிமன்றம் தீர்வு காண வேண்டிய பிரச்சனையாக கருதுவது என்னவெனில்,

(1) எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட இதச பிரிவுகள். 328 உ/இ- 24(1) COTPA Act. 2003 , ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**10) <u>பிரச்சனை எண். 1 -</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பு சாட்சிகள், இருதரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டன.

**11) அரசு தரப்பு வழக்கறிஞர் வாதத்தின் முக்கிய சாராம்சங்கள் -**

(i) இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், கடந்த 16.10.2022 ம் தேதி காலை 11.30 மணியளவில் தாலுக்கா காவல் உதவி ஆய்வாளர் திருமதி. சத்தியா என்பவருடன் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் விழுப்புரம் தாலுக்கா காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஜானகிபுரம் ஜங்ஷனில் வாகன தணிக்கை செய்துக்கொண்டிருந்தபோது எதிரி தீனதயாளன் என்பவர் TN 32 AS 9424 என்ற பதிவெண் கொண்ட Honda Activa இருசக்கர வாகனத்தில் மனித உயிருக்கு கேடு விளைவிக்கக்கூடிய அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களான Hans – 600 பாக்கெட்டுகள், Cool lip – 80 பாக்கெட்டுகள் VI -20 பாக்கெட்டுகள் ஆகியவற்றை விற்பனைக்காக எடுத்து வந்து குற்றம் புரிந்துள்ளார் என்றும், எனவே எதிரியின் செய்கையானது இதச பிரிவு. 328 உ/இ- 24(1) COTPA Act 2003 , ன் படியும் தண்டிக்கத்தக்கது என்றும் வாதிட்டார்.

மேலும், இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 திரு. தேவசேனா ( தலைமை காவலர் ) , அ.சா.2. திரு . இளவேந்தன் ( முதல் நிலை காவலர்) , அ.சா.3 திரு . சத்யா ( உதவி ஆய்வாளர் ) புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் தங்களது சாட்சியத்தில் எதிரியிடமிருந்து புகையிலை பொருட்கள் மற்றும் மது மயக்க பொருட்கள் கைப்பற்றியது குறித்தும். அவரிமிடமிருந்து 1. Hans – 600 பாக்கெட்டுக்கள் 2. Cool lip 80 பாக்கெட்டுகள் 3) VI- Tobacco -20 பாக்கெட்டுகள் கைப்பற்றியது குறித்தும் சான்று பொருள். 1 முதல் சான்று பொருள்.

4 ஆகியவற்றை கைப்பற்றியது குறித்தும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், புலன் விசாரணை அதிகாரி ஆய்வு செய்தது குறித்தும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளதன் மூலம் சான்று பொருள்.1 முதல் சான்று பொருள். 4 ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளது தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் , எனவே எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதிபடுத்தப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரியை மேற்படி குற்றச்சாட்டுக்களுக்காக தண்டிக்க வேண்டும் என்றும் " வாதிட்டார்.

**12) எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதத்தின் முக்கிய சாராம்சங்கள் -**

(i) இந்த வழக்கில் வாதிட்ட கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் , இந்த வழக்கில் முறையாக புலன் விசாரணை செய்யப்படவில்லை என்றும், இந்த வழக்கில் தனி நபர்கள் யாருமே சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும், . கைப்பற்றுதல் மகசர் சாட்சியாக தனி நபர் எவரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் இந்த சங்கதி அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைந்துள்ளது என்றும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா. 3 வரையிலான சாட்சிகள் அனைவருமே அரசு அலுவலர்கள் மற்றும் காவல் துறையை சார்ந்தவர்கள். எனவே முறையாக சான்று பொருள் கைப்பற்றப்படவில்லை. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் குறுக்கு விசாரணையில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளது, அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே அமைந்துள்ளது என்றும், வழக்கின் சான்றாவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், காவல் துறை அதிகாரிகள் மட்டுமே சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்கள்

என்றும், எனவே எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசு தரப்பு சாட்சிகள் ஏற்புக்குரியதாக இல்லை என்றும், , எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**13) கண்ணுற்ற மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளின் சாட்சியம் -**

இருதரப்பு வாதுரைகளின் அடிப்படையில் இந்த வழக்கை கவனத்துடன் பரிசீலித்து பார்க்கும்போது இந்த வழக்கில் அ.சா.1 ஆக சிறப்பு உதவிஆய்வாளர் திரு. தேவசேனா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், " தான் தற்போது கண்டமங்கலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், தான் கடந்த 16/10/2022-ஆம் தேதி தாலுக்கா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தேன் என்றும், உதவி ஆய்வாளர் சத்யா, காவலர் இளவேந்தன், ஆகியோர் அன்று காலை 11 - 30 மணிக்கு எங்களது காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட ஜானகிபுரம் ஜங்ஷன் அருகில் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, TN.32AS9424 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இரு சக்கர வாகனத்தில் ஒரு வெள்ளை பையுடன் வந்தவரை மடக்கி விசாரிக்க எத்தனித்தபோது, அவர் இருசக்கர வாகனத்தை கீழே போட்டுவிட்டு தப்பித்து ஓடிவிட்டார் என்றும், அந்த வெள்ளைப் பையை சோதனை செய்ய அதில் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் சுமார் 14.5 கிலோ கிராம் எடையுள்ள HANS பாக்கெட் - 600 பாக்கெட் (40 x 15), Cool lip - 80 பாக்கெட் (8 x 10), V1 Tobacco - 20 பாக்கெட் ஆகியவற்றின் மதிப்பு ரூ.14,500/- இருக்கும் என்றும், மேலும் அவரைப் பற்றி விசாரித்த போது, அவரது பெயர் தீனதயாளன் தந்தை பெயர் கிருஷ்ணமூர்த்தி மேற்கு தெரு, மேலமங்கலம்,

திருவெண்ணைநல்லூர் தாலுக்கா என்று தெரியவந்தது என்றும், அவரைப் பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும், அவர் தற்போது நீதிமன்றத்தில் உள்ள எதிரி தான் என்றும், மேலும் மேற்படி பொருட்களையும், அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும், அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் தங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் அவர்கள் 11.45 மணியளவில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றிக் கொண்டார்கள் என்றும், அதில் தானும், முதல் நிலை காவலர் 2332 இளவேந்தனும் கையொப்பம் செய்தோம் என்றும், கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் 13.00 மணிக்கு காவல் நிலையம் ஆஜரானோம் என்றும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1ம் கையெழுத்து தன்னுடையதாகும் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆகும். மேலும் HANS - 600 பாக்கெட், Cool lip - 80 பாக்கெட், V1 Tobacco - 20 பாக்கெட் ஆகியவைகளையும், மேலும் அந்த இருசக்கர வாகனம் ஹோண்டா ஆக்டிவா பதிவு எண் TN-32AS-9424 ஆகியவைகளை பார்த்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும், அதில் 1 முதல் 3 வரையிலானவைகள் சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையிலானவை என்றும், மேலும் ஆக்டிவா வாகனத்திற்கான 3 புகைப்படங்கள் சா.பொ.4 என்றும், காவல் நிலையம் சென்று உதவி ஆய்வாளர் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, எங்களை விசாரணை செய்தார்கள் என்றும், நாங்கள் நடந்தவைகளை சொல்லிக் கொண்டோம் என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) இந்த வழக்கில் அ.சா.2 ஆக முதல்நிலை காவலர் திரு. இளவேந்தன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தின் முதல் விசாரணையில் " தான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் காவல் நிலையத்தில் முதல்

நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், நான் கடந்த 16/10/2022-ஆம் தேதி தாலுக்கா காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்தேன் என்றும், உதவி ஆய்வாளர் சத்யா, தலைமைகாவலர் தேவசேனா, ஆகியோர் அன்று காலை 11 - 30 மணிக்கு தங்களது காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட ஜானகிபுரம் ஜங்ஷன் அருகில் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, TN.32 AS 9424 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இரு சக்கர வாகனத்தில் ஒரு வெள்ளை பையுடன் வந்தவரை மடக்கி விசாரிக்க எத்தனித்தபோது, அவர் இருசக்கர வாகனத்தை கீழே போட்டுவிட்டு தப்பித்து ஓடிவிட்டார் என்றும், அந்த வெள்ளைப் பையை சோதனை செய்ய அதில் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் சுமார் 14.5 கிலோ கிராம் எடையுள்ள HANS பாக்கெட் - 600 பாக்கெட் (40 x 15), Cool lip - 80 பாக்கெட் (8 x 10), V1 Tobacco - 20 பாக்கெட் ஆகியவற்றின் மதிப்பு ரூ.14,500/- இருக்கும் என்றும், மேலும் அவரைப் பற்றி விசாரித்த போது, அவரது பெயர் தீனதயாளன் தந்தை பெயர் கிருஷ்ணமூர்த்தி, மேற்கு தெரு, மேலமங்கலம், திருவெண்ணைநல்லூர் தாலுக்கா என்று தெரியவந்தது. அவரைப் பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும், . அவர் தற்போது நீதிமன்றத்தில் உள்ள எதிரி தான் என்றும் மேலும் மேற்படி பொருட்களையும், அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தையும், அந்நிய சாட்சிகள் யாரும் இல்லாததால் தங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் அவர்கள் 11.45 மணியளவில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றிக் கொண்டார்கள் என்றும், அதில் தானும், காவலர் முதல் நிலை காவலர் தேவசேனாவும் கையொப்பம் செய்தோம் என்றும், கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் 13.00 மணிக்கு காவல் நிலையம் ஆஜரானோம் என்றும்,

கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ம் கையெழுத்து தன்னுடையதாகும் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 என்றும், மேலும் HANS - 600 பாக்கெட், Cool lip - 80 பாக்கெட், V1 Tobacco - 20 பாக்கெட் ஆகியவைகளையும், மேலும் அந்த இருசக்கர வாகனம் ஹோண்டா ஆக்டிவா பதிவு எண் TN-32AS-9424 ஆகியவைகளை பார்த்தால் தன்னால் அடையாளம் காண்பிக்க முடியும் என்றும், அதில் 1 முதல் 3 வரையிலானவைகள் சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையிலானவைகளாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்றும், மேலும் ஆக்டிவா வாகனத்திற்கான 3 புகைப்படங்கள் சா.பொ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், காவல் நிலையம் சென்று உதவி ஆய்வாளர் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தங்களை விசாரணை செய்தார்கள் என்றும், தாங்கள் நடந்தவைகளை சொல்லிக் கொண்டோம் என்றும் " சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) மேற்படி சாட்சிகளின் சாட்சியம் நம்பக தன்மை வாய்ந்ததா? என்பதை பார்க்கும்போது அ.சா.1 தனது சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில், " இந்த வழக்கு சம்பந்தமாக தனிப்பட்ட நபர் யாரும் எங்களிடம் புகார் அளிக்கவில்லை என்றும், எதிரியின் பெயரை யார் எங்களுக்கு சொன்னது என்றால் நாங்கள் வாகன தணிக்கை செய்யும் இயந்திரத்தை வைத்து பார்த்தபோது எதிரியின் பெயர் தெரியவந்தது. அதுமட்டுமல்லாது திருவெண்ணெய் நல்லூர் காவல் நிலையத்திலும் விசாரணை செய்தோம். அவர்களும் சொன்னார்கள். இந்த விவரத்தை நான் என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தபோது சொன்னேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரம் பகல் நேரம் என்றால் சரிதான். ஜங்ஷன் பகுதி என்பதால்

அந்த இடத்தில் இரு சக்கர வாகனம் நெரிசல் மிகுந்த பகுதி என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரை எங்களது காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்தார் என்றும் " ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) இந்த வழக்கில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட இளவேந்தன் தனது குறுக்கு விசாரணையில், " சம்பவ இடத்தில் வாகன தணிக்கையில் ஈடுபட்டது குறித்து எனது பாக்கெட் டைரியில் குறித்து வைத்துள்ளேன் என்றால் ஆமாம். என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தபோது. நான் அதை ஒப்படைத்தேனா? என்றால், ஒப்படைத்தேன். நான் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பு வேறு எந்த பணியில் இருந்தேன் என்றால் காவல் நிலையப் பணியில் இருந்தேன்.என்றும், சம்பவம் நடந்ததாக நான் சொல்லும் நேரம் பகல் நேரம்தான். ஜங்ஷன் பகுதி தான் இருசக்கர வாகனம் மற்றும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான் என்றும் " சாட்சியமளித்துள்ளார்.

(v) மேற்படி அ.சா.1, அ.சா.2 ஆகியோரின் குறுக்கு விசாரணை சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாகவே அமைந்துள்ளது. மேலும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அ.சா.1 தனிநபர் யாரும் புகார் அளிக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். எனவே உண்மையில் மதுமயக்க பொருட்கள் கைப்பற்றப்பட்டதா? என்பதில் இந்த நீதிமன்றத்திற்கு ஐயமே எழுகிறது. தனிப்பட்ட சாட்சிகளை விசாரித்து அவர்கள் முன்னிலையில் புகையிலை பொருட்கள் கைப்பற்ற முயற்சி எடுக்காதது ஏன் என்பதற்கு அரசு தரப்பில் உரிய விளக்கம் அளிக்கப்படவில்லை. இந்த சங்கதி அரசு தரப்பு வழக்கிற்கு எதிரிக்கு எதிராக

ஒரு எதிர் மறை யூகத்தையே ஏற்படுத்துகிறது. இந்த வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் அனைவரும் காவல்துறை சாட்சிகள் என்ற நிலையிலும், மேற்படி அ,சா.1 , அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில் முரண்பாடுகள் உள்ள நிலையிலும் , தனிப்பட்ட சாட்சிகளை முன்னிலைப்படுத்தப்படாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

**17) புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தின் மூலம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் உறுதிபடுத்தப்பட்டுள்ளதா?**

(i) இந்த வழக்கில் அ.சா. 3 ஆக புலன் விசாரணை அதிகாரியான காவல்துறை உதவி ஆய்வாளர் சத்யா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில்,

> " கடந்த 16.10.2022- 11.30 – மணிக்கு திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலை ஜானகிபுரம் ஜங்ஷனில் அ.சா.1 , அ.சா.2 ஆகியோருடன் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, அந்த வழியாக திருச்சி நோக்கி வந்த TN 32 AS 9424 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா வாகனத்தில் வெள்ளை நிற சாக்கு பையுடன் வந்தவரை சந்தேகத்தின் பெயரில் நிறுத்திய போது மேற்படி நபர் தலைமறைவாகிவிட்டார் என்றும், பின்பு வாகனத்தை சோதனை செய்து பார்த்தபோது, அந்த சாக்கு பையில் 1) ஹான்ஸ்-40 பாக்கெட்டுகள் 15 வீதம் மொத்தம் 600 பாக்கெட்டுகள், 2) Cool lip - 8 பாக்கெட்டுகள் 10 வீதம் மொத்தம் 80 பாக்கெட்டுகள், 3) V1 Tobacco - 20 பாக்கெட்டுகள் மொத்தம் சுமார் 14 ½ கிலோ இருந்தது. இதன் மொத்த மதிப்பு சுமார் ரூ.14,500 என்றும்,

தப்பி ஓடிய தலை மறைவு எதிரியை பற்றி விசாரித்தபோது அவர் பெயர் தீனதயாளன் என தெரிய வந்தது. அவற்றை அன்றைய தினமே சாட்சிகளின் முன்னிலையில் 11:45 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன் என்றும், அன்றைய தினமே 13.00 மணிக்கு நிலையம் ஆஜராகி எதிரியின் மீது விழுப்புரம் தாலுக்கா நிலைய குற்ற எண் 675/2022 இ.த.ச பிரிவுகள். 328 உ/இ 24 (1) COTPA ACT -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகசரை படிவம்-95 மற்றும் பொருட்களுடன் இணைத்து அனுப்பி வைத்தேன் என்றும், படிவம்-95 அ.சா.ஆ 3 என்றும், பின்பு மேற்படி சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து, வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளது குறித்தும், சான்று பொருள் கைப்பற்றியது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார் .

(ii) மேற்படி அ.சா. 3 தனது சாட்சியத்தின் குறுக்கு விசாரணையில்,

" சம்பவம் நடந்ததாக சொல்வதைப் பற்றி தனிநபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாகன தணிக்கை செய்தது வழக்கமாக ரோந்து பணியின் போது செய்யும் வாகனத் தணிக்கையா? அல்லது ரகசிய புலனாளி அளித்த தகவலின் பெயரில் செய்யப்பட்ட வாகன தணிக்கையா? என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் தனி நபர்கள் யாரையும் விசாரணை செய்து சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஜங்ஷன் பகுதி மற்றும் பகல் நேரம் என்பதால், பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால்

சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு உட்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் தகவல் ஏதாவது கொடுத்தேனா? என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி பொதுமக்கள் வசிக்கும் மற்றும் கல்வி நிறுவனங்கள் நடக்கும் பகுதி என்று எனது முதல் தகவல் அறிக்கையில் மற்றும் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் என்றும், நானே தன்னிச்சையாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததால் சம்பவ இடத்தை குறித்து வரைபடம் வரைய தேவையில்லை. வேறு நபர் புகார் கொடுத்தால் தான் அப்படி நாங்கள் வரைவோம். முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயர் யார் சொன்னது என்று குறிப்பிட்டுள்ளேனா? என்றால், முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை அது ரகசிய புலனாளி கொடுத்த தகவல் என்பதால் குறிப்பிடவில்லை. சம்பவ இடத்தில் வெள்ளை பையை கைப்பற்றியதாக கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும்,

ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அ.சா.3 ன் குறுக்கு விசாரணை சாட்சியம் சற்று முரணாகவே அமைந்துள்ளது.

(iii) குறிப்பாக அ.சா.1 ன் சாட்சியத்தின் மூலம் தனிப்பட்ட நபர்களை விசாரிக்க அ.சா.3 புலன் விசாரணை அதிகாரி முன்வரவில்லை என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேலும் கைப்பற்றப்பட்ட பொருட்களில் நச்சு பொருட்கள் உள்ளதா? என்பதை கண்டறிய அதனை பகுப்பாய்வு செய்து ஆய்வறிக்கை அனுப்பப்படவில்லை என்ற அ.சா.3 ன் சாட்சியத்தின் மூலம் தெளிவாக தெரிய வருகிறது. மேலும் எதிரியிடமிருந்து சான்று பொருள்

கைப்பற்றப்பட்டது குறித்து காண்பிக்க தாக்கல் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசர் நம்பிக்கைக்கு உரியதாக இல்லை. சம்பவ இடத்தில் வெள்ளை நிற கையை கைப்பற்றியதாக கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. மேலும் இந்த வழக்கில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்யாததற்கு அரசு தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

(iv) வழக்கில் புகார் அளித்த நபர் புலன் விசாரணை அதிகாரியாக இருக்கலாம் என்பதில் இந்த நீதிமன்றத்திற்கு மாற்று கருத்து எதுவும் இல்லை. இது போன்ற வழக்குகளில் காவல்துறை சாட்சியங்களை வைத்து மட்டுமே தண்டனை வழங்கலாம். ஆனால் அந்த சாட்சியங்கள் நம்பிக்கை தரும் வகையில் இருக்க வேண்டும் என்பது நன்கு அமைந்துவிட்ட சட்ட விதி ஆகும்,. எனினும் அவ்வாறு இந்த வழக்கில் சாட்சிய சான்றாவணங்கள் தெளிவாக உள்ளதா? என்று பார்க்கும் போது இந்த வழக்கில் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதன் அடிப்படையில் சான்று பொருள். 1 மற்றும் சான்று பொருள். 2 கைப்பற்றப்பட்டதாக எந்த வாதமும் முன் வைக்கப்படவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் எதிரியால் அளிக்கப்படாததற்கு அரசு தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. மேற்படி எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களில் நச்சு உள்ளதா? என்பதை அறிய தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்படவில்லை. இந்த முரண்பாடுகளை புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே மேற்படி அ.சா. 1, அ.சா.2

இருவருமே தங்களது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளனர். இந்த வழக்கில் புலன் விசாணை அதிகாரி புலன் விசாரணை செய்தது குறித்தும், சான்றுபொருள் கைப்பற்றியது குறித்தும் , சான்று பொருட்களை நீதிமன்றத்திற்கு அனுப்பியது குறித்தும் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளித்துள்ளனர். எனவே உண்மையில் எதிரியிடமிருந்து சான்றுபொருள்கள்.1 முதல் 4 வரை கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து இந்த நீதிமன்றத்திற்கு சந்தேகமே எழுகிறது. அந்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுவிக்கலாம் என்ற எதிரி தரப்பு வாதம் ஏற்புக்குரியதாகவே உள்ளது. மேலும், இது போன்ற வழக்குகளில் தனிப்பட்ட சாட்சிகள் இல்லாமல் தண்டனை வழங்கும்போது அந்த வழக்கின் நம்பக தன்மைக்கு கேடு விளைவித்து விடக்கூடும் என்று எதிரி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வாதம் ஏற்புக்குரியதாகவே உள்ளது.

**21)** எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், கடந்த 16.10.2022 ம் தேதி காலை 11.30 மணியளவில் திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஜானகிபுரம் ஜங்கசனில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் வாகன தணிக்கை செய்துக் கொண்டிருந்தபோது எதிரி தீனதயாளன் என்பவர் TN 32 AS 9424 என்ற பதிவெண் கொண்ட Honda Activa இருசக்கர வாகனத்தில் மனித உயிருக்கு கேடு விளைவிக்கக்கூடிய அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களான Hans – 600

பாக்கெட்டுகள், Cool lip – 80 பாக்கெட்டுகள் VI -20 பாக்கெட்டுகள் ஆகியவற்றை விற்பனைக்காக எடுத்து வந்து குற்றம் புரிந்துள்ளனர் என்றும், எனவே எதிரியின் செய்கையானது இதச பிரிவு. 328 உ/இ- 24(1) COTPA Act 2003 ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் இவ்வாறாக பிரச்சனை எண்.1 க்கு தீர்வு காண்கிறது.

முடிவாக, எதிரி மீது இதச. பிரிவு. 328 உ/இ. 24(1) COTPA Act. 2003 - ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை குவி.முச. பிரிவு. 235 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன். இவ்வழக்கில் எதிரிக்கு ஏற்பட்டுள்ள பிணைமுறிகள் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் இரத்தாகும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

சா.பொ.1 முதல் சா.பொ. 3 வரையிலான சான்று பொருட்கள் பயனற்றவை என்பதால் அவற்றை மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்புக்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. சா.பொ. 4 ஆன TN 32 AS 9424 என்ற பதிவெண் கொண்ட Honda Activa இருசக்கர வாகனம் ஏற்கனவே மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதால் மேல்முறையீட்டு காலம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்பிற்கு பின்னர் அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

RAJASIMMAVARMAN S
Digitally signed by RAJASIMMAVARMAN S
Date: 2026.03.23 20:29:32 +0530

கூடுதல் அமர்வு நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
விழுப்புரம்.

**அரசுத்தரப்பு சாட்சிகள் -**

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு. தேவசேனா ( தலைமை காவலர் ) |
| 2 | அ.சா.2 | திரு. இளவேந்தன் ( முதல் நிலை காவலர் ) |
| 3 | அ.சா.3 | திரு, சத்யா ( ஆய்வாளர் ) |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள் -**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 16.10.2022 | கைப்பற்றுதல் மகசர் . |
| 2 | அ.சா.ஆ.2 | 16.10.2022 | முதல் தகவல் அறிக்கை . |
| 3 | அ.சா.ஆ.3 | 16.10.2022 | படிவம். 95. |

**<u>அரசு தரப்பு சான்று பொருள் . சி.பி. 98/2025</u> .**

1. சா.பொ.1 ... Hans 600 Pockets ( 40 X 15= 600)

2. சா.பொ.2 ... Cool lip ( 80 Pockets ( 8x10= 80 pockets)

3. சா.பொ.3 .. VI TOBACCO 20 Pockets .

4. சா.பொ.4 .. TN 32 AS 9424 என்ற பதிவெண்ணுள்ள Honda Activa இருசக்கர வாகனம்
Eng .No, JF91 EG0109224
Ch.No. ME4JF 913CLG109379.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>** - இல்லை.

**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u>** - - இல்லை.

## Case Summary

| SL.No. | Description | Details | | |
|---|---|---|---|---|
| 1 | எதிரி அடைப்பு காவலில் இருந்த காலம் . | எதிரி - கைது செய்யப்படவில்லை, . | | |
| 2 | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கலான நாள் | 10.11.2022 | | |
| 3 | வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்ட நாள் | 13.10.2025 | | |
| 4 | எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 10.11.2025 | | |
| 5 | வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனுக்களும் அவற்றின் முடிவும் (கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழான மனு நீங்கலாக ) | NIL | | |
| . | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சி | மு.வி | கு.வி |
| | | அ.சா.1 | 05.02.2026 | 05.03.2026. |
| | | அ.சா.2 | 05.02.2026 | 05.03.2026. |
| | | அ.சா.3 | 12.03.2026 | 12.03.2026 |

| | | |
|---|---|---|
| 7 | எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313 ன் கீழ் வினவப்பட்ட நாள். | 13.03.2026 |
| 8 | எதிரி தலைமறைவாக இருந்த காலம் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜரான / ஆஜர்படுத்தப்பட்ட காலம். | NIL |
| 9 | மேல் நீதிமன்றங்கள் வழங்கிய ஸ்டே உத்தரவு மற்றும் அதன் முடிவும். | இல்லை |

RAJASIMMAVARMAN S
Digitally signed by RAJASIMMAVARMAN S
Date: 2026.03.23 20:29:48 +0530

கூடுதல் அமர்வு நீதிபதி,

(விரைவு நீதிமன்றம்),

விழுப்புரம்.

**அசல் / நகல் தீர்ப்பு**

**அமர்வு வழக்கு எண். 259/2025**

**நாள். 16.03.2026**